# 10 சமய இலக்கியங்கள்

எமது சமயத்தின் உண்மைகளை அறிந்து கொள்வதற்குச் சமய இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன. இவ்விலக்கியங்கள் பெரும்பாலும் உரைநடை வடிவிலோ அல்லது செய்யுள் வடிவிலோ அமைந்திருக்கும். இவ்வாறான சமய இலக்கியங்கள் என்ற வகையில் புராணங்களும் இதிகாசங்களும் முதன்மையானவையாகக் காணப்படுகின்றன.

இந்த இரண்டு சமய இலக்கியங்களும் காலத்தால் முந்தியவையாகும். அவை முறையே பழைய வரலாறு, இப்படி முன்பு இருந்தவை என்ற பொருட்களைக் கொண்டுள்ளன. இதனால் இவை இரண்டும் எமது வாழ்க்கையுடன் இணைந்தும் உள்ளன. புராணங்கள் என்னும் போது அவை மகாபுராணங்கள், சைவபுராணங்கள், தலபுராணங்கள் என்று வேறுபடுகின்றன. இதனடிப்படையில் அவை கூறும் விடயங்களும் வேறுபட்ட தன்மைமைகளைக் கொண்டனவாகும். இருந்தும் இவற்றுக்கிடையே தொடர்புகள் இல்லாமலுமில்லை. இதே போல் இதிகாசங்கள் என்ற வகையில் மகாபாரதம், இராமாயணம் ஆகியவற்றை உள்ளடக்கிக் கொள்ளலாம்.

இந்த இரண்டு சமய இலக்கியங்களிலும் பல்வேறுபட்ட பண்புகளையும் இனங்கண்டு கொள்ளலாம். அவையாவன-

1. **உயரிய கருத்துக்களை எளிய நடையில் கூறும் முறை.**
2. **சாதாரண பாமரர்களும் விளங்கும் வகையில் அமைந்த மொழிநடை.**
3. **இறைவன் அருட்சக்தி காட்டப்படல்.**
4. **வாழ்வின் பக்குவத்தையும் தேவைகளையும் உணர்த்தல்.**
5. **வாழ்வியல், அரசியல், தர்மம், சகோதரபாசம், ஒற்றுமை, நன்றிமறவாமை, நட்பு,பொறுமை போன்ற இன்னோரன்ன விழுமியங்களை வெளிக்கொணர்தல்.**
6. **நாட்டார் வழக்காறுகளை ஏற்படுத்தல்.**

போன்றவற்றைக் கூறிக்கொள்ளலாம். இப்பண்புகள் யாவும் இன்று எமது சமயத்துடன் இணைந்து காணப்படுகின்றன. மேலும் இவற்றிலே ஒருவனே தேவன், உயிர்கள் பல, இறைவன் திருவிளையாடல், இறைவனை நம்பினோர் கைவிடப்படார் என்பன போன்ற விடயங்களும், கிரியைகள், சடங்குகள் என்பவற்றின் தத்துவங்களும் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் நாட்டார் கலைகளான

கூத்து, நாட்டியநாடகம் மற்றும் நுண்கலைகள் என்பன காணப்படுகின்றன. ஆலயங்களைச் சூழ மக்கள் குடியிருப்புக்கள், அவர்களது சொற்பதங்கள் என்பன காணப்பட்டமையால் அவை இன்றும் எமது சமய வாழ்வுடன் இணைந்து காணப்படுகின்றன.

சைவத்தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்பட்ட தமிழ் மொழிப் புராணங்களாக பெரியபுராணமும், கந்த புராணமும் காணப்படுகின்றன.இவற்றுள் அன்பால் நிறைந்த அமுத சுரபியாக விளங்குவது பெரியபுராணம்; அறிவால் நிறைந்த களஞ்சியமாக விளங்குவது கந்தபுராணம். இந்த இரண்டு புராணங்களும் சைவ இலக்கியங்களுள் இரண்டு கண்களாகத் திகழ்கின்றன. அன்பை அள்ளி வழங்குவதனால் பெரியபுராணம் தாய் போலவும், அறிவை வழங்குவதனால் கந்த புராணம் தந்தை போலவும் எம்மைப் புரந்து வருகின்றன.



சமய இலக்கியமாகவும், சைவக்காப்பியமாகவும் கருதப்படுவது பெரியபுராணமாகும். இதனைச் சேக்கிழார் இயற்றினார். இது பன்னிரண்டாம் திருமுறைக்குள் அடக்கப்பட்டுள்ளது. கி.பி 12ஆம் நூற்றாண்டிலே சோழப் பேரரசை ஆண்ட அநபாயன் எனப்படும் இரண்டாம் குலோத்துங்க சோழ மன்னன் வேண்டிக் கொண்டதற்கிணங்க சேக்கிழாரால் பாடப்பட்டது.

சங்ககாலம் தொடக்கம் சோழர் காலம் வரையான காலப்பகுதியில் தமிழ் நாட்டில் வாழ்ந்து சைவப்பணிகள் பல ஆற்றிய நாயன்மார்களின் திவ்விய வரலாற்றினை, பக்திச் சுவை நனி சொட்டும் வகையில் சேக்கிழார் பாடியுள்ளார். இந்நூலுக்கு முதல் நூலாக சுந்தரமூர்த்தி சுவாமி அருளிய **திருத்தொண்டர் தொகை**யும் வழி நூலாக நம்பியாண்டார் நம்பி அருளிய **திருத்தொண்டர் திருவந்தாதி**யும் அமைகின்றன. பெரிய புராணம் அறுபத்து மூன்று தனியடியார்கள் பற்றியும், ஒன்பது தொகையடியார்கள் பற்றியும் கூறுகின்றது. இது 4,250 செய்யுள்களை உடையது.

சேக்கிழார், பெரியபுராணத்தில் நாயன்மார்களுள் ஒருவரான சுந்தரரைக் காவிய நாயகனாகக் கொண்டு இதனைப்படைத்துள்ளார். இறைவன் **உலகெலாம்** என அடியெடுத்துக் கொடுக்க **உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்.........** என்ற காப்புச் செய்யுளுடன் ஆரம்பமாகிறது. இப்புராணத்தில் பல்வகை விடயங்களைச் சேக்கிழார் விபரித்துள்ளார்.

முருகப் பெருமானது தோற்றம், ஆடல், வீரம், அருள் என்பனவற்றைத் தமிழில் கூறும் புராணமாக கந்தபுராணம் அமைகிறது. காஞ்சிபுரத்துக் குமரக் கோட்டத்தில் பூசகராக இருந்த கச்சியப்ப சிவாச்சாரியாரால் இது அருளப்பட்டது. வடமொழியில் அமைந்த சிவசங்கர சங்கிதையைத் தழுவி தமிழில்

பாடப்பட்டதாகும். இப்புராணம் உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம் எனும் ஆறு காண்டங்களையும் 10,346 விருத்தப்பாக்களையும் உடையது. சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாச இயல்புகளை ஆங்காங்கே தெளிவாக விளக்கி நிற்கிறது. இப்புராணம் நவில்தொறும், நவில்தொறும் நூல் நயம் பயப்பது.

**மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. சமய இலக்கியங்கள் என்றால் என்ன?
2. புராணங்கள் எத்தனை வகைப்படும்?
3. புராண இதிகாசங்கள் மூலம் வெளிக் கொணரப்பட்ட விழுமியங்கள் இரண்டைத் தருக.
4. பெரியபுராணத்தின் முதல் நூலும், வழி நூலும் யாவை?
5. கந்தபுராணம் எத்தனை காண்டங்களை உடையது? அவை யாவை?

**செயற்பாடு.**

**01)** உமது பாடசாலை நூலகத்திலுள்ள சைவ சமய இலக்கிய நூல்கள் ஐந்தினையும் அவற்றின் ஆசிரியர்களையும் அவை கூறும் முக்கிய விடயங்களையும் சேகரித்து அட்டவணைப் படுத்தி வகுப்பறையில் காட்டுப்படுத்துங்கள்.

**பாடச்சுருக்கம்.**


- சமய இலக்கியங்கள் சமய உண்மைகளை வெளிக் கொணரச் செய்தன.
- புராணங்கள், இதிகாசங்கள் என்பன பிரதான சமய இலக்கியங்கள்.

# கந்தபுராணத்தில் ஒரு காட்சி

## திருப்பெருவடிவம்

### கதைச்சுருக்கம்

கந்தபுராணத்தின் யுத்த காண்டத்தில் இடம்பெறும் பகுதி திருப்பெரு வடிவம் ஆகும். இது முருகனின் சிறப்புகளைக் கூறுவதாகும். தேவர்கள் அசுரர்களால் பட்ட துன்பங்களைப் போக்குவதற்காகவே இவ்வடிவத்தை முருகப் பெருமான் எடுத்தார். இவ்வடிவத்தின் மூலம் சூரனை வதம் செய்த பகுதி சிறப்புப் பெறுகிறது. ஆன்மாவைப் பீடித்துள்ள மும்மலங்கள் இறையருளால் நீக்கமடைந்து ஆன்மா ஞானத்தைப் பெறும் என்னும் தத்துவத்தை இக்கதைப்பகுதி மூலம் அறியலாம். இதில் சூரன் ஆணவமலமாகவும், சிங்கமுகன் கன்ம மலமாகவும், தாரகன் மாயா மலமாகவும் கொள்ளப்படுகின்றனர். முருகப் பெருமான் ஞானமாகிய வேலைக் கொண்டு மும்மலங்களாகிய அசுரர்களை அழித்துத் தேவர்களைப் பாசங்களிலிருந்து காத்தருள் செய்கிறார்.




முருகப் பெருமானது திருப்பெருவடிவம் இருபது பாடல்களில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலும் பக்தியை முன்னெடுத்துச் செல்கின்றது. சூரன் சினத்துடன் போர் செய்கின்றான். அவனது முகத்தைப்பார்த்து பின்வருமாறு முருகப்பெருமான் கூறுகிறார். "நீ மாய வடிவங்களை எடுத்தாய் அதன் மூலம் என்னுடன் போர் செய்தாய்; இனி என் பரமேஸ்வர வடிவத்தைக் காட்டுகிறேன்" என்று முருகன் கூறும் கூற்றானது, அவர் எல்லை கடந்தவர், மேலானவர் என்பதைக் காட்டுகிறது.

முருகப் பெருமானின் இவ்வடிவம் பிரபஞ்சப் பொருட்கள் அனைத்தையும் கொண்டதாகும். இதனைக்கண்ட சூரன் அதிசயிக்கிறான். இந்த வடிவமானது விஷ்ணு, பிரம்மா, தேவர்கள் அனைவருக்கும் மூலகாரணமான பரமசிவ வடிவமாகும். சிவனே முருகனாக வந்தவர் என்பதை நான் அறியவில்லை என சூரன் எண்ணுகிறான். இவனின் இந்த வடிவத்தின் மொத்த உருவை எக்காலம் சென்றாலும் காணமுடியாது, எனது ஆணவம் கெட்டது, எல்லாப் பொருட்களிலும் இவ்வடிவத்தையே காண்கின்றேன், எனது கால்கள் இவ்வடிவத்தையே வலம்வர விரும்புகின்றன, நா துதிபாட விரும்புகிறது. மனம் விரும்பினாலும் என் மானம் இவற்றைச் செய்ய விடவில்லை.

இவனோடு நான் போர் புரிந்தது, அவனது திருவிளையாடலால்தான். என்னைக் கொல்ல வேண்டும் என அவன் நினைத்தால் யாரும் தடுக்கவும் முடியாது, என்று சூரன் நினைக்கின்ற போது முருகப்பெருமான் மயில் வாகனத்தில் பாலகனாகத் தோன்றி ஞானத்தைக் கொடுக்க முற்படுகிறார். அவ்வேளையில் சூரன் மாய மாமரமாகிறான். இவ்வேளை சூரனது மார்பை முருகப்பெருமானது வேலாயுதம் பிளக்கிறது. அப்போது முருகப்பெருமான் அவனது ஆணவத்தை அடக்கி ஞானத்தைக் கொடுக்கின்றார்.

முருகப் பெருமானது இத் திருப்பெரு வடிவத்தின் சிறப்பை கச்சியப்பர் பாடல்கள் மூலம் நாமும் அறிகிறோம். ஆதலால், பதியாகிய முருகப் பெருமான் மேலானவர் என்பதையும், அவரைமீறி நான் எனது என்ற அகங்கார மமகாரம் கொண்டால் இறுதியில் பதியால் அடக்கப்படுவோம் என்பதையும் இப்பகுதி உணர்த்துகின்றது.

**1. உடல்சின மோடு சூரன் ஒருவனாய் அங்கண் நின்றான்**
**அடல்வலி கொண்ட வாளி அந்தர நெறியால் மீண்டு**
**புடையுறு சரங்க ளோடு பொள்ளெனத் தூணி புக்க**
**சுடர்நெடுந் தனிவே லண்ணல் அவன்முகம் நோக்கிச் சொல்வான்.**

**பதவுரை :** உடல் சினமோடு சூரன் - சூரபன்மன் மாறுபட்டுப் போர் செய்யும் கோபத்தோடு ஒருவனாய் அங்கண் நின்றான் - மாய வடிவங்கள் யாவும் அழிந்து போகத் தான் ஒருவனாய்த் தனித்து நின்றான், அடல்வலி கொண்ட வாளி – அம்மாயங்களை வெற்றி பெற்ற வலிய அம்புகள், அந்தர நெறியால் மீண்டு – ஆகாய வழியாய்த் திரும்பி, புடைஉறு சரங்களோடு – பக்கத்தே உள்ள மற்றைய அம்புகளோடும், பொள்ளென – விரைவாக, தூணிபுக்க – அம்புக் கூட்டினுள் புகுந்த போது, சுடர் நெடும் தனிவேல் அண்ணல் பிரகாசிக்கின்ற மேதக்க இணையற்ற வெற்றி வேலாயுதப் பொருமான், அவன் முகம் நோக்கிச் சொல்வான் - அச்சூரபன்மனது முகத்தைப் பார்த்துக் கூறினார்.

**பொழிப்புரை :** சூரன் மாறுபட்டுப் போர் செய்யும் வகையில் சினத்துடன் நிற்க, அம்புகள் மீண்டு வான்வழிச் சென்று ஏனைய பாணங்களோடும் அம்புக் கூட்டினுள் புக்கனவாக வெற்றி வேலாயுதப் பெருமான் அச்சூரபன்மனது முகத்தைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்.

**2. வெம்புய லிடையில் தோன்றி விளிந்திடு மின்னு வென்ன**
**இம்பரில் எமது முன்னம் எல்லையில் உருவங் கொண்டாய்**
**அம்பினில் அவற்றை யெல்லாம் அட்டனம் அழிவிலாத**
**நம்பெரு வடிவங் கொள்வ நன்றுகண் டிடுதி யென்றான்.**

**பதவுரை :** வெம்புய இடையில் தோன்றி விளிந்திடு மின்னு என்ன – முகிலுக்கு இடையே தோன்றி மறைந்து போகின்ற மின்னலைப்போல, இம்பரில் - இந்த யுத்தகளத்தில், எமது முன்னம் - எம் முன்னே, எல்லை இல் உருவங்கொண்டாய் - எல்லையற்ற பல மாய வடிவங்களைக் கொண்டாய், அம்பினில் அவற்றை எல்லாம் அட்டனம் - அவ்வடிவங்களை எல்லாம் மிக இலகுவாக அஸ்திரங்களினாலே அழித்தோம். அழிவிலாத நம்பெரு வடிவம் கொள்வம் - எனது அழிவற்ற பெரிய பரமேஸ்வர வடிவத்தைக் கொள்வோம், நன்று – அதனால் உனக்குப் பெரும் நன்மை உண்டாம், கண் டிடுதி என்றான் - தரிசித்துக்கொள் என்றார்.

**பொழிப்புரை :** முகிலுக்கு இடையிலே தோன்றி அழிகின்ற மின்னலைப் போல இவ் யுத்தகளத்தில் என் முன்னே மாய வடிங்களைக் கொண்டாய் அவற்றை எல்லாம் நான் பாணங்களினாலேயே அழித்தேன். இனி எனது பரமேஸ்வர வடிவத்தைக் கொள்கிறேன்; தரிசித்துக்கொள்; இதனால் உனக்கு மேலும் பெரிய நன்மை உண்டாகும் என்றார்.

**03. கூறிமற் றினைய தன்மை குரைகடல் உலகந் திக்கு**
**மாறிலாப் புவனம் அண்டம் வானவர் உயிர்கள் யாவும்**
**ஆறுமா முகத்து வள்ளல் மேனியில் அமைந்த தன்றி**
**வேறிலை என்ன ஆங்கோர் வியன்பெரு வடிவங் கொண்டான்.**

**பதவுரை :** கூறிமற்ற இனைய தன்மை - இங்ஙனம் திருவாய் மலர்ந்தருளி, குரைகடல் - ஒலிக்கின்ற சகல சமுத்திரங்களும், உலகம் - சகல உலகங்களும் - திக்கு – எல்லாத்திசைகளும், மாறு இலாப் புவனம் - மாறுபாடற்ற சகல புவனங்களும், அண்டம் - எல்லா அண்டங்களும், வானவர் - எல்லாத் தேவர்களும், உயிர்கள் யாவும் - சகல ஜீவராசிகளும், ஆறுமாமுகத்து வள்ளல் மேனியில் அமைந்தது அன்றி – மகிமை மிக்க ஆறுமுகப்பெருமானின் மேனியில் அமைந்து

இருப்பதே அல்லாமல், வேறுஇலை என்ன – வேறாக ஒன்றேனும் இல்லையென்று கண்டோர் கூறுமாறு, அங்கு ஓர் வியன்பெரு வடிவங்கொண்டான் - அங்கேயொரு வியக்கத் தக்க பெரிய திருமேனியைக் கொண்டார்.

**பொழிப்புரை:** முருகப்பெருமான் இங்ஙனம் கூறி, எல்லாப் பிரபஞ்சப் பொருள்களும் தம் திருமேனியில் அமைந்து இருக்கின்ற பரமேஸ்வர வடிவத்தைக் கொண்டார்.

**4. இறுதியும் முதலும் இல்லா இப்பெரு வடிவந் தன்னைக்**
**குறைவிட முறழுஞ் சூரன் கண்டுவிம் மிதத்தின் நிற்ப**
**அறிவரும் உணர்தல் தேற்றா ஆறுமா முகத்து வள்ளல்**
**சிறிதுநல் லுணர்ச்சி நல்க இனையன செப்ப லூற்றான்.**

**பதவுரை :** இறுதியும் முதலும் இல்லா – அடிமுடி காண்பதற்கு அரிதான, இப்பெரு வடிவந் தன்னை - இந்த விசுவரூபத்தை, கறைவிடம் உறழும் சூரன் கண்டு – கரிய நஞ்சையொத்த சூரபன்மனும் கண்டு, விம்மிதத்தின் நிற்ப – அதிசயத்து நின்றானாக, அறிவரும் உணர்தல் தேற்றா – அறிஞர்களும் அறிந்து கொள்வதற்கு அரிய, ஆறுமா முகத்து வள்ளல் - அழகிய ஆறுதிருமுகங்களையுடைய அருள்வள்ளலாம் முருகப்பெருமான், சிறிது நல் உணர்ச்சி நல்க – சிறிதளவு ஞான உணர்ச்சியைக் கொடுக்க, இனையன செப்பல் உற்றான் - இங்ஙனம் கூறுவான்.

**பொழிப்புரை:** நஞ்சை ஒத்த சூரபன்மன் அடிமுடியற்ற இவ்விஸ்வ ரூபத்தைக் கண்டு அதிசயித்து நிற்க, அறிஞர்கள் தாமும் அறிதற்கரிய ஆறுமுகனின் உண்மை ஞானத்தைக் கொடுக்கப் பின்வருமாறு கூறுவார்.

**5. கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்**
**பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்**
**மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்**
**மூலகா ரணமாய் நின்ற மூர்த்தி அன்றோ?**

**பதவுரை :** கோலமா மஞ்சை தன்னில் - அழகிய மயில்வாகனத்தின் மீது, குலவிய குமரன் தன்னை – வீற்றிருக்கும் முருகப்பெருமானை, பாலன் என்று இருந்தேன் - சாதாரண சிறுவன் என்று எண்ணியிருந்தேன். அந்நாள் பரிசு இவை உணர்த்திலேன் யான் - முன்னையகாலத்து பரமே ஸ்வர மூர்த்தியே இவர் என்று நான் அறியவில்லை, மால் அயன் தனக்கும் - விஷ்ணு பிரம்மாவுக்கும், ஏனைவானவர் தமக்கும் - ஏனைய தேவர் களுக்கும், யார்க்கும் - எவருக்கும், மூல காரணமாய் நின்ற மூர்த்தி - மூல காரணமாயுள்ள பரமேஸ்வரனும், இம் மூர்த்தி அன்றோ - இவனும் ஒன்றன்றோ.



**பொழிப்புரை :** அழகிய மயில் வாகனத்தின் மீது எழுந்தருளிய முருகப்பெருமானை யான் அரசு வீற்றிருந்த காலத்தில் ஒரு சிறுவன் என்றே எண்ணியிருந்தேன். இப்பொழுது பார்க்கும் பரமேஸ்வர மூர்த்தியே அச்சிறுவன் என அறிந்திலேன். இப்போது பார்க்கும் போது விஷ்ணு, பிரம்மா, தேவர்கள் அனைவருக்கும் மூலகாரணனான பரமசிவனே அவன் என்பது விளங்குகிறது.

6. **ஒற்றென முன்னம் வந்தோன் ஒருதனி வேலோன் தன்னைப்**
**பற்றிக லின்றி நின்ற பராபர முதல்வன் என்றே**
**சொற்றனன் சொற்ற எல்லாந் துணிபெனக் கொண்டி லேனால்**
**இற்றையிப் பொழுதில் ஈசன் இவனெனுந் தன்மை கண்டேன்.**

**பதவுரை:** ஒற்று என முன்னம் வந்தோன் - முன்பு என் அரண்மனைக்குத் தூதாக வீரவாகு, ஒரு தனி வேலோன் தன்னை - இணையற்ற வெற்றி வேலாயுதப் பெருமானை, பற்று இகல் இன்றி நின்ற பராபர முதல்வன் என்றே சொற்றனன் - விருப்பு வெறுப்பற்ற பரமசிவன் என்றே கூறினான். சொற்ற எல்லாம் - அவ்வாறு அவன் கூறியதை துணிபு எனக் கொண்டிலேன், இற்றை இப்பொழுதில் ஈசன் இவன் எனும் தன்மை கண்டேன் - இன்று பரமசிவனே இவன் என்ற உண்மையைக் கண்டு கொண்டேன்.

**பொழிப்புரை:** சில நாட்களுக்கு முன் என்னிடம் தூதாக வந்த வீரவாகு, சிவன் என்றே எனக்கு வற்புறுத்திக் கூறினான். அதனை எனது அகங்காரத்தினால் உண்மையென நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இன்று இப்பாலகனே பரமசிவன் என்பதை புரிந்துள்ளேன்.

**7. சீர்க்கும ரேசன் கொண்ட திருப்பெரு வடிவந் தன்னில்**
**ஏர்க்குறும் ஒளியுஞ் சீரும் இளமையும் எழிலும் எல்லாம்**
**ஆர்க்குள வுலகில் அம்மா அற்புதத்தோடும் பல்காற்**
**பார்க்கினுந் தெவிட்டிற் றில்லை இன்னுமென் பார்வை தானும்.**

**பதவுரை:** சீர்க் குமரேசன் கொண்ட திருப்பெரு வடிவம் தன்னில் - செல்வம் மிக்க முருகப் பெருமான் கொண்ட தெய்வீக மயமான அந்தப் பரமேஸ்வர வடிவத்தை, ஏர்க்கு உறும் ஒளியும் - அழகு விளங்குவதற்குக் காரணமான ஒளிகளும், சீரும் இளமையும் எழிலும் எல்லாம் - சிறப்பும் இளமையும் வனப்பும் ஆகிய அனைத்தும், ஆர்க்கு உள உலகில் - உலகத்தில் வேறு யாருக்கு உண்டு? அம்மா அற்புதத் தோடும் பல்கால் பார்க்கினும் - அதிசயத்தோடு பலமுறை பார்த்தாலும், தெவிட்டிற்று இல்லை இன்னும் என் பார்வை தானும் இன்னமும் என் கண்களுக்கு அலுக்கவில்லை.

**பொழிப்புரை:** செல்வம் மிக்க முருகப் பெருமான் கொண்ட இவ்விசுவரூபத்தில், அழகு விளங்குவதற்கு காரணமான ஒளியும், சிறப்பும் இளமையும் வனப்பும் ஆகிய அனைத்தும் உலகத்தே வேறு யாரிடம் உண்டு? என அதிசயத்தோடு பலமுறை பார்த்தாலும் என் மனமும் கண்ணும் திருப்தியடையவில்லையே.

**8. அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின் காறும்**
**எண்ணிலா வூழிகாலம் எத்திறன் நோக்கி னாலுங்**
**கண்ணினால் அடங்கா துன்னிற் கருத்தினால் அடங்கா தென்பால்**
**நண்ணினால் அமருங் கென்கை அருளேன நாட்டலாமே.**

**பதவுரை:** அண்ணல் ஆர் குமரன் மேனி - பெருமை பொருந்திய முருகப் பெருமான் இந்த விசுவ ரூபத்தில் அடிமுதல் முடியின் காறும் - அனைத்து

உறுப்புக்களையும் எண் இலா ஊழி காலம் - எண்ணற்ற ஊழிக் காலமாக, எத்திறம் நோக்கினாலும் - எவ்வாறு நுட்பமாகப் பார்த்தாலும்,கண்ணினால் அடங்காது – கண் பார்வைக்கு உட்படாது, உன்னில் கருத்தினால் அடங்காது – நினைத்தாலும் கருத்துக்கும் உட்படாது என்பால் நண்ணினான் அமருக்கு என்கை – என்னுடன் போர் புரிய வந்தான் என்று சொல்வது. அருள் நாட்ட லாம் - என் மீது வைத்த கருணை என்றே சொல்ல வேண்டும்.

**பொழிப்புரை :** பதித்துவப் பெருமைமிக்க முருகன் கொண்ட இவ் விசுவரூபத்தின் அடிமுதல் முடி வரையுள்ள அங்கங்களை, எத்தகைய நுட்பமாகப் பல காலம் பார்த்தாலும் கண் பார்வையால் முழுதாகக் காண முடியாது, மனத்தாலும் முழுமையாக் கணிக்க முடியாது. அத்தகைய பெரியோன் என்னுடன் போரிட வந்தது என் மீது வைத்த கருணை என்றே கூறவேண்டும்.

**9. திருகிய வெகுளி முற்றுந் தீர்ந்தன செருவின ஊக்கம்**
**அருகிய துரோமம் புள்ளி ஆயின விழியில் தூநீர்**
**பெருகிய திவன்பால் அன்பு பிறந்தன தமியேற் குள்ளம்**
**உருகிய தென்பு தானம் உலைமெழு காகும் அன்றே.**

**பதவுரை :** திருகிய வெகுளி முற்றும் தீர்ந்தன – என் மனத்தில் எழுந்த பெருஞ் சீற்றம் எல்லாம் தீர்ந்தது, செருவின் ஊக்கம் அருகியது – போர் புரிய வேண்டும் என்ற எண்ணமும் சோர்ந்தது, உரோமம் புள்ளி ஆயின – உரோமங்களும் சிலிர்த்தன, விழியில் தூநீர் பெருகியது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது, இவன்பால் அன்பு பிறந்தன - இவன் மீது அன்பு ஏற்பட்டது, தமியேற்கு உள்ளம் உருகியது – தனித்தவனான எனக்கு உள்ளம் உருகியது, என்பு தானும் உலைமெழு காகும் அன்றே – கடினமான எலும்புகள் தாமும் நெருப்பில் பட்ட மெழுகு போல் நெக்குருகும் அன்றோ.

**பொழிப்புரை:** தனித்தவனான எனக்கு உள்ளத்தின்கண் முதிர்ந்த கோபமும் தீர்ந்தது, யுத்தம் செய்ய வேண்டும் என்ற மன எழுச்சியும் சோர்ந்தது. உரோமங்களும் சிலிர்த்தன. ஆனந்தக் கண்ணீரும் பெருகிற்று. அன்பும் தோன்றியது. மனமும் உருகியது. என்பு நெருப்பில் பட்ட மெழுகு போன்று உருகுகின்றதல்லவோ.

**10. போயின அகந்தை போதம் புகந்தன வலத்த தான**
**தூயதோர் தோளுங் கண்ணுந் துடித்தன புவன மெங்கும்**
**மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படு கின்ற விண்ணோர்**
**நாயகன் வடிவங் கண்டேன் நற்றவப் பயனீ தன்றே.**

**பதவுரை:** போயின அகந்தை – எனக்கு அகங்காரம் அடங்கிவிட்டது, போதம் புகந்தன – உண்மை ஞானம் உதயமாயிற்று, வலத்ததான தூயதோர் தோளும் கண்ணும் துடித்தன – சிறந்தனவான வலத்தோளும் வலக்கண்ணும் துடித்தன, புவனம் எங்கும் மேயின பொருள்கள் முற்றும் - சகல அண்ட புவனங்களிலும் காணப்படும் பொருட்கள் அனைத்தும், வெளிப்படுகின்ற விண்ணோர் நாயகன் வடிவங் கண்டேன் - வெளிப்பட்டுத் தோன்றும் தேவ நாயகன் முருகனின் பரமேஸ்வர வடிவத்தைத் தரிசித்தேன், நல் தவப்பயன் ஈது அன்றோ - இது நான் செய்த நல்ல தவப்பயனல்லவா.

**பொழிப்புரை:** எனக்கு அகங்காரம் அடங்கிவிட்டது. எனக்கு ஞானம் பிறந்துள்ளது(உண்டாயிற்று). வலது தோளும் வலது கண்ணும் துடித்தன. எல்லா அண்டங்களும் அவற்றிலுள்ள எல்லாப் பொருட்கள் அனைத்தும் வெளிப்படுவதற்கு இடமாகிய தேவநாயகராம் முருகவேளின் திருப்பெருவடிவத்தைத் தரிசிக்கும் பேறு பெற்றேன். இது நான் முன்பு செய்த தவத்தின் பயனாகும்.

**11. சூழுதல் வேண்டுந் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை**
**தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுத் தாலு**
**ஆழுதல் வேண்டுந் தீமை அகன் றுநான் இவற்கா ளாகி**
**வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே.**

**பதவுரை:** சூழுதல் வேண்டும் தாள்கள் - எனது கால்கள் இப்பெருமானை வலம்வர விரும்புகின்றன. தொழுதிடல் வேண்டும் அங்கை – எனது கைகள் வணங்க விரும்புகின்றன, தாழுதல் வேண்டும் சென்னி – என் தலையும் வணங்க விரும்புகிறது, துதித்திடல் வேண்டும் தாலு – எனது நாவும் துதிக்க விரும்புகின்றது. ஆழுதல் வேண்டும் தீமை அகன்று – பாவச்செயல்களை ஒழித்து, நான் இவற்கு ஆள் ஆகி – நான் இப்பெருமானுக்கு ஆட்பட்டு, வாழுதல் வேண்டும். நெஞ்சம் - வாழ்தலை விரும்புகிறது. என் மனம், தடுத்தது மானம் ஒன்றே – மானம் என்னும் ஜீவகுணம் இவற்றை எல்லாம் தடுத்து நின்றது.

**பொழிப்புரை:**

என் கால்கள் இப்பெருமானை வலம்வர விரும்புகிறது. கைகள் வணங்க விரும்புகின்றன. தலை தாழ்ந்து வணங்க விரும்புகிறது. நாவும் துதிக்க விரும்புகிறது. மனம் கீழ்மையான பாவச்செயல்களை விட்டு ஆட்பட்டு வாழ விரும்புகின்றது. ஆனால், தன்மானம் இவற்றை எல்லாம் தடுத்து நிற்கிறது.

**12.** **ஏடவிழ் அலங்கல் மார்பான் என்னுடன் இந்நாள் காறும்**
**நீடிய இகற்போர் ஆற்றி நீங்கலான் நின்ற தெல்லாம்**
**ஆடலின் இயற்கை யென்றே அறிந்தனன் அ∴தான் றன்னான்**
**சாடிய வேண்டு மென்னின் யாரது தாங்கற் பாலார்.**

**பதவுரை:** ஏடு அவிழ் அலங்கல் மார்பன் - இதழ் மலர்ந்து விரிந்த கடம்பமாலை அணிந்த மார்பையுடைய முருகன், என்னுடன் இந்நாள் காறும் - என்னோடு இன்று வரையும், நீடிய இகல்போர் ஆற்றி – நீண்ட பகைமை மிக்க போரைச் செய்து, நீங்கலான் நின்றது எல்லாம் - விட்டு நீங்காதவராய் நின்ற தன்மை எல்லாம், ஆடலின் இயற்கை என்றே அறிந்தனன் - அவனின் திருவிளையாடல் என்றே தெளிந்தேன் அ∴தான்று – அவ்வாறன்றி, அன்னான் சாடிய வேண்டும் என்னின் - அப்பெருமான் என்னைச் சம்ஹாரம் செய்ய வேண்டும் என்றால், யாரது தாங்கற் பாலார் - யாரால் அதனைத் தடுத்து நிறுத்த முடியும்?

**பொழிப்புரை:** கடம்ப மாலையை அணியப்பெற்ற மார்பை உடையவராகிய முருகப்பெருமான் என்னோடு இன்று வரை போர் செய்து கொண்டு என்னை விட்டு நீங்காது நின்ற தன்மைகள் எல்லாம், அவனின் திருவிளையாடலே என்று புரிந்து கொண்டேன். தவிர அவன் என்னைக் கொல்லவேண்டும் என்று எண்ணினால் அதனை யார் தான் தடுக்க முடியும்? யாராலும் முடியாது.

**13. ஒன்றொரு முதல்வ னாகி உறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள் நெஞ்சினித் தளரேன் அம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனும் நானே யானேன்
என்றுமிப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்ப துண்டோ.**

**பதவுரை:** ஒன்று ஒரு முதல்வன் ஆகி உறைதரு மூர்த்தி முன்னம் - பிரபஞ்சப் பொருள்கள் அனைத்தும் பொருந்திய இணையற்ற திருமேனியையுடைய முதற்பரம் பொருளாம் இப் பெருமானுடைய திருக்கோவில், நின்று அமர்செய்தேன் இந்நாள் - இன்று வரை அவரை எதிர்த்துப் போர் செய்தேன், நெஞ்சு இனி தளரேன் - இனி மனம் தளரமாட்டேன், நன்று இது ஓர் பெருமை பெற்றேன் - நல்ல இந்த ஒரு பெருமையையும் பெற்றேன், வீரனும் நானே ஆனேன் - நானே சிறந்த வீரனும் ஆகினேன், என்றும் இப்புகழே நிற்கும் - எக்காலத்திலும் இந்தப் புகழ் நிற்கத்தக்கது, இவ் உடல் நிற்பது உண்டோ - இந்த பூத உடல் நிற்காதல்லவா?

**பொழிப்புரை:** இன்றுவரையும் ஒப்புயர்வற்ற பரம்பொருளாய் என்றுமுள்ள இப்பெருமானுக்கு முன்னே நின்று போராடினேன். இனி மனம் தளரேன். நல்ல ஒரு பெருமையையும் பெற்றேன். நானே மகா வீரனும் ஆனேன். என்றும் இப்புகழ் நிற்குமே அல்லாமல் இவ்வுடம்பு நிற்காதல்லவா?

**14. என்னஇத் தகைய பன்னி நிற்றலும் எவர்க்கும் மேலோன்
உன்னருந் தகைத்தாய் நின்ற ஒருபெருந் தோற்றம் நீத்து
மின்னிவர் கலாபம் ஊர்ந்த வியனுருக் கொண்டு நண்ணித்
துன்னலன் போத மாற்றித் தொன்மைபோ லாகச் செய்தான்**

**பதவுரை:** என்ன இத்தகைய பன்னி நிற்றலும் - இங்ஙனம் சூரபன்மன் கூறிநின்ற போது, எவர்க்கும் மேலோன் எவ்வகைப்பட்ட தேவர்க்கும் தலைவனான முருகப்பெருமான், உன்ன அருந்தகைத்து ஆய் நின்ற ஒரு பெருந்தோற்றம் நீத்து – மனத்தால் நினைத்ததற்கும் அரிதாய விசுவரூபத்தை மறைத்து, மின் இவர் கலாபம் ஊர்ந்த – பசிய ஒளிமிக்க மயில்வாகனத்தில் ஏறியூர்த்த, வியன் உருக்கொண்டு நண்ணி – வியக்கத்தக்க பாலகன் வடிவில் தோன்றி, துன்னலன் போதம் மாற்றி – பகைவனான சூரனுக்குத் தோன்றச் செய்த ஞானத்தை மறைத்து, தொன்மை போல் ஆகச் செய்தான் - முன்பு போல அஞ்ஞான வசமடையச் செய்தான்.

**பொழிப்புரை:** இவ்வாறு சூரபன்மன் கூறிநிற்க, ஆறுமுகப்பெருமான் நினைத்தற்கரிய தம் பரமேஸ்வர வடிவத்தை மறைத்து, மயிலேறி விளையாடும் திருமேனியைக் காட்டி நின்று அப்பகைவனது ஞானத்தை மாற்றி, மறுபடியும் அஞ்ஞான வசத்தனாகும்படி செய்தார்.

**15. ஆயது துணிவாக் கொண்ட அவுணர்கள் மன்னன் பின்னும்**
**தீயதோர் தொல்லை மாயச் சீர்கொண்மந் திரத்தைப் பன்னி**
**ஞாயிறு மருட்கை கொள்ள ஞாலமுங் ககன முற்றும்**
**மாயிருள் உருவங் கொண்டு மறைந்துநின் றார்க்க லுற்றான்.**

**பதவுரை:** ஆயது துணிவாக் கொண்ட – அவ்வாறு தேவர்களை அழித்தலைத் தீர்மானமாகக்கொண்ட, அவுணர்கள் மன்னன் - அசுரர் அரசனாகிய சூரபன்பமன், பின்னும் தீயதோர் தொல்லை மாயச் சீர்கொள் மந்திரத்தைப் பன்னி மறுபடியும் தீமை மிக்க சிறந்த ஓர் மாய மந்திரத்தை உச்சரித்து, ஞாயிறும் மருட்கை கொள் - இருள் அகற்றும் தொழில் செய்யும் சூரியனும் மயங்கும்படி, ஞாலமும் ககனம் மற்றும் மா இருள் உருவங்கொண்டு – பூமி ஆகாயம் எங்கும் பெரிய இருள் வடிவு கொண்டு, மறைந்து நின்று அதனுள் மறைந்து நின்று, ஆர்க்கலுற்றான் - ஆர்ப்பரவஞ் செய்தான்.

**பொழிப்புரை :** அங்ஙனம் துணிந்த சூரபன்மன், மறுபடியும் தீமை மிக்க ஒரு மாய மந்திரத்தை உச்சரித்துச் சூரியனும் மயங்கும்படி, பூமி ஆகாயம் எங்கும் பெரிய இருள் வடிவு கொண்டு, அதனுள் மறைந்து நின்று ஆர்ப்பரவம் செய்தான்.

**16. ஏயென முருகன் தொட்ட இருதலை படைத்த ஞாங்கர்**
**ஆயிர கோடி என்னும் அருக்கரில் திகழ்ந்து தோன்றித்**
**தீயழற் சிகழி கான்று சென்றிட அவுணன் கொண்ட**
**மாயிருள் உருவ முற்றும் வல்விரைந் தகன்ற தன்றே**

**பதவுரை :** ஏயென முருகன் தொட்ட – மிக விரைவாக முருகப்பெருமானால் எய்யப்பட்ட, இருதலைபடைத்த ஞாங்கர் - இருமருங்கும் அலகுகளைக் கொண்ட வேலானது, ஆயிரகோடி என்னும் அருக்கரில் திகழ்ந்து தோன்றி – ஆயிரம்கோடி பிரகாசத்தையுடையதாகத் தோன்றி, தீ அழல் சிகழி கான்று சென்றிட – சுடுகின்ற அக்னிச் சுவாலையை யாண்டும் வீசிக்கொண்டு செல்ல, அவுணன் கொண்ட மா இருள் உருவம் முற்றும் - சூரபன்மன் கொண்டிருந்த மாய இருள் வடிவம் அனைத்தும், வல்விரைந்து அகன்றது – மிக்க விரைவாக நீங்கிற்று.

**பொழிப்புரை :** முருகப்பெருமான் விரைவாக விட்ட வேல் ஆயிரம் கோடி சூரியப்பிரகாசத்தோடு தோன்றி, யாண்டும் தீச்சுவாலையை வீசிச்செல்ல, சூரபன்மன் கொண்ட இருள் வடிவம் அனைத்தும் நீங்கிற்று.

**17. அத்தியின் அரசு பேர ஆலமும் தெரிக்கில் ஏங்க**
**மெய்த்திறல் வாகை வன்னி மெலிவுற வீரை யாவுந்**
**தத்தம திருப்பை நீங்கத் தாதவிழ் நீபத் தாரோன்**
**உய்த்திடு தனிவேல் முன்னர் ஒருதனி மாவாய் நின்றான்.**

**பதவுரை :** அத்தியின் அரசு பேர – மழையரசனாகிய வருணன் தன்னிலை நீங்கவும், ஆலமும் தெரிக்கில் ஏங்க – ஆலகால விஷம் மாறுபட்டெழுந்தால் ஏங்கத் தக்கதாகவும், மெய்த்திறல் வாகை வன்னி மெலிவுற – எதையும்

எரிக்கும் இயல்புடைய அக்கினி மெலியவும், வீரையாவும் தத்தமது இருப்பை நீங்க – சமுத்திரங்கள் யாவும் தத்தமது நிலையிலிருந்து மாறவும், தாது அவிழ் நீபத் தாரோன் உய்த்திடு தனிவேல் முன்னர் - இதழ் விரிந்து மலர்ந்த கடம்பமாலையை அணிந்த முருகப்பெருமான் எய்த வேற்படைக்கு எதிராக, ஒருதனி மாவாய் நின்றான் - இணையற்ற பெரிய மாய மாமர வடிவத்தில் நின்றான்.

**பொழிப்புரை :** வருணன் நிலை மாறவும், நஞ்சு தானும் அச்சமுறவும், அக்னி மெலியவும், சமுத்திரங்கள் எல்லாம் தத்தமது நிலைமாறவும், முருகப்பெருமான் விட்ட வேற்படைக்கு எதிரே மாய மாமர வடிவமாய் சூரபன்மன் நின்றான்.

**18. செங்கதிர் அயில்வாள் கொண்டு செருமுயன் றுரமின் ஆர்த்துத்**
**துங்கமொ டெதிர்ந்து சீறுஞ் சூருரங் கிழித்துப் பின்னும்**
**அங்கம திருகூ றாக்கி அலைகடல் வரைப்பில் வீட்டி**
**எங்கணும் மறைகள் ஆர்ப்ப எ.்.கம்வான் போயிற் றம்மா.**

**பதவுரை :** செங்கதிர் அயில்வாள் கொண்டு – செவ்வொளி மிக்க கூரிய வாட்படையைக் கொண்டு, செரு முயன்று – போர்த்தொழில் முயன்று உருமின் ஆர்த்தி - இடியேறு போல ஆர்ப்பரித்து, துங்கமொடு எதிர்த்து சீறும் - பெருமையோடு எதிர்ந்து கோபித்து, சூர் உரம் கிழித்து – சூரபன்மனது மார்பைப் பிளந்து, பின்னும் அங்கம் அது இரு கூறாக்கி – பின்னிக்கொண்டிருந்த அவ்வுடலை இரண்டாகச் செய்து, அலைகடல் வரைப்பில் வீட்டி – அலைகள் மிக்க கடலிலே எறிந்துவிட்டு, எங்கணும் மறைகள் ஆர்ப்ப – எல்லா இடத்திலும் வேதங்கள் முழங்க, எ.்.கம் - வேற்படையானது, வான் போயிற்று – ஆகாய மார்க்கமாகப் பாய்ந்து போனது.

**பொழிப்புரை :**

கூரிய வாட்படை கொண்டு போர்த்தொழில் செய்து இடிபோலார்த்து எதிர்த்து நின்ற சூரபன்மனது மார்பை வேலாயுதமானது பிளந்து பின்னியிருந்த சூரன், பதுமன் என்பவரது இரு உடலையும் வேறுபடுத்திக் கடலில் எறிந்து விட்டு, எங்கும் வேதம் முழங்க வேலானது வான் வழியாகச் சென்றது.

**19. மருள்கெழு புள்ளே போல வந்திடு சூர எந்தை**
**அருள்கெழு நாட்டஞ் சேர்த்த ஆங்கவன் இகலை நீங்கித்**
**தெருள்கழு மனத்த னாகி நின்றனன் சிறந்தார் நோக்கால்**
**இருள்கெழு கரும்பொன் செம்பொன் னாகிய இயற்கை யேபோல்.**

**பதவுரை:** மருள்கெழு புள்ளே போல வந்திடு சூரன் - மயக்க உணர்வுடைய பட்சி வடிவுற்று வந்த சூரபன்மன், எந்தை அருள்கெழு நாட்டம் சேர்த்த – எம் நாயகனாம் முருகப்பெருமான் தமது திருவருட் பார்வையை நல்க, ஆங்கவன் இகலை நீங்கி – அச்சூரபன்மன் தனது பகைமை விட்டு, தெருள்கெழு மனத்தன் ஆகி நின்றனன்- தெளிந்த மனத்தினன் ஆகி நின்றான், சிறந்தார் நோக்கால் - சிறந்த சித்தர்களின் தரிசன வேதிகளின் பார்வையால், இருள்கெழு கரும்பொன் - கரிய இரும்பு என்னும் உலோகம், செம்பொன் ஆகிய இயற்கையேபோல் - சிவந்த மாற்றுயர்ந்த பொன்னாய் மாறிய தன்மையைப் போலும்.

**பொழிப்புரை:** மயக்க உணர்வுடைய பட்சி வடிவுற்று வந்த சூரபன்மன் முருகப் பெருமானது அருட்பார்வையில் பட்டு பகை தீர்ந்து தெளிவுற்று நின்றான். அது தரிசன வேதிகளின் பார்வையிற் பட்டு இரும்பு பொன்னானது போலிருந்தது.

**20. தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமுன் உற்றால்**
**தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை**
**ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த**
**மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா வருள்பெற் றுய்ந்தான்.**

**பதவுரை:** தீயவை புரிந்தாரேனும் - பெரிய பாவங்களைச் செய்தாரேனும், குமரவேள் திருமுன் உற்றால் - முருகப்பெருமானின் திருச்சந்நிதியில் சேர்வராயின், தூயவர் ஆகி – பாவநாசம் பெற்ற பரிசுத்தராய், மேலைத் தொல் கதி அடைவர் என்கை – மேன்மையான முத்திப்பேற்றை அடைவர் என்று சொல்வது, ஆயவும் வேண்டும் கொல்லோ – ஆராய்ந்து பார்க்கவும் வேண்டுமோ, அடுசமர்-கொடிய போர்த்தொழிலை, இந்நாள் செய்த மாயையின் மகனும் அன்றோ - இந்நாட்களில் செய்த தீய மாயவள் மைந்தனாம் சூரபன்மனும் அல்லவா, வரம்பு இலா அருள் பெற்று உய்ந்தான் - எல்லையில்லா திருவருளைப் பெற்று உய்வடைந்தான்.

**பொழிப்புரை:** பெரிய பாவிகள் எனினும் முருகப்பெருமானின் திருச்சந்நிதியை அடைந்தால் பாவ நீக்கம் பெற்று வீடுபேறு எய்துவர் என்பது ஆராய வேண்டியதொன்றல்ல. ஏனெனில், பெரிய தீச்செயலான போர்த்தொழிலை இந்நாட்களில் செய்த சூரபன்மனும் அல்லவா அப்பெருமானது திருவருட் பேறெய்தி உய்வடைந்தான்.

## மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. திருப்பெருவடிவம் கந்த புராணத்தின் எக்காண்டத்தில் இடம்பெறுகிறது?
2. கந்தபுராணத்தில் மும்மலங்களால் குறிக்கப்படுபவர்கள் யாவர்?
3. முருகப்பெருமானது திருப்பெருவடிவத்தைக் கண்ட சூரபன்மன் எவ்வாறு வியந்து கூறுகிறான்?
4. சூரபன்மன் முருகப் பெருமானோடு மீண்டும் யுத்தம் புரிவதற்கான காரணம் யாது?
5. கந்த புராணத்தின் மூலம் உணர்த்தப்படும் தத்துவக்கருத்து யாது?

## செயற்பாடு

01) கந்த புராணத்தின் ஏனைய காண்டங்களில் காணப்படும் புராணக் கதைகளை அறிந்து அவற்றை அட்டவணைப் படுத்தி வகுப்பறையில் காட்டுப்படுத்துக.

02) உங்கள் பிரதேசத்தில் உள்ள முருகன் ஆலயமொன்றில் நடைபெறும் சூரன் போரை பார்த்து, சூரன் போர் பற்றிய விவரணமொன்றை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

- திருப்பெருவடிவம் கந்தபுராணத்தின் யுத்தகாண்டத்தில் இடம் பெறுகிறது.
- பாலன் என்று எண்ணி இருந்த முருகப்பெருமானது திருப் பெருவடிவத்தைக் கண்ட சூரபத்மன் பலவாறு மெய் சிலிர்த்து வியந்து இருக்கின்றான்.
- சூரபத்மன் தனது ஆணவ மிகுதியால் மீண்டும் முருகப் பெருமானோடு யுத்தம் புரிகின்றான்.
- முருகப் பெருமானது வேலாயுதம் சூரமத்மனுடைய மார்பை இரு கூறாகப் பிளந்து கடலில் வீசுகின்றது.
- இந்நூலில் பதியின் இயல்பு, ஆன்ம இயல்பு, மும்மலம் போன்ற சித்தாந்தக் கருத்துக்கள் கூறப்படுகின்றன.